11th STD

# பொதுத் தேர்வு - மார்ச் - 2019

# மாதிரி வினாத்தாள்

# கணக்குப்பதிவியல்

நேரம் : 2.30 மணி | மதிப்பெண் : 90

## பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். | 20 × 1 = 20

1. கீழ்க்கண்டவைகளில் எது சரியானது?
   அ) முதல் = சொத்துகள் + பொறுப்புகள் ஆ) முதல் = சொத்துகள் - பொறுப்புகள்
   இ) பொறுப்புகள் = சொத்துகள் + முதல் ஈ) அனைத்தும் சரியானதே

2. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
   அ) ஆள்சார்கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்
   இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்

3. பின்வருவனவற்றில் தறான பொருத்தம் எது ?
   அ) குறிப்பேடு -- முதன்மைப்பதிவேடு
   ஆ) விற்பனை ஏடு -- துணை ஏடு
   இ) ரொக்க ஏடு -- முதல் மூலப்பதிவேடு
   ஈ) பேரேடு -- தோற்றப்பதிவேடு

3. பின்வரும் வாக்கியங்களில் எது உண்மையல்ல?
   (அ) ரொக்கத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது
   (ஆ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது
   (இ) வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது

4. மிகச் சரியான ஒன்றை தேர்தெடுக்கவும்.
   மாற்றுச் சீட்டு என்பது --------
   அ) நிபந்தனையுடன் கூடிய ஆணை
   ஆ) ஏற்குநரால் கையொப்பம் இடப்பட்டிருக்கும்
   இ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை எழுதுநருக்கோ அல்லது மாற்றுப் பெற்றவருக்கோ செலுத்தப்படும்.
   ஈ) முத்திரைவில்லை ஒட்டப்பட்டதாகவோ அல்லது முத்திரைத் தாளில் எழுதப்பட்டதாகவோ இல்லாமல் இருக்கும்.

5. கீழ்க்கண்டவற்றில் எது எதிர்ப்பதிவாக பதிவு செய்யப்படும்?
   அ) சொந்த செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
   ஆ) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
   இ) வாடிக்கையாளர், நிறுவனத்தின் வங்கிக்கணக்கில் நேரடியாகச் செலுத்திய தொகை
   ஈ) வங்கி எடுத்துக் கொண்ட வட்டி

6. தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை எவ்வாறு அழைக்கலாம்?
   அ) சாதாரண ரொக்கஏடு ஆ) இருபத்தி ரொக்கஏடு
   இ) முப்பத்தி ரொக்கஏடு ஈ) சில்லறை ரொக்கஏடு



7. கணக்கியல் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை பதியும் வரிசை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து சரியான வரிசையைக் கண்டுபிடிக்கவும்.
   1) இருப்பாய்வு 2) குறிப்பேடு 3) நடவடிக்கைகள் 4) பேரேடு
   அ) 2-3-4-1 ஆ) 1-2-3-4 இ) 3-2-4-1 ஈ) 4 -3-2-1

8. பின்வரும் எக்காரணங்களினால் வாடிக்கையாளர், சரக்களிப்பவருக்கு சரக்கினைத் திருப்பி அனுப்புகிறார்?
   (i) குறைபாடுள்ள சரக்குகள்
   (ii) வாடிக்கையாளருக்கு தாமதமாக சரக்கினை அனுப்புதல்
   (iii) தேவைக்கு அதிகமான சரக்குகளை அனுப்புதல்
   (iv) சரக்கு மாதிரியிலிருந்து மாறுபட்டிருத்தல்
   சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.
   அ) (iii) மட்டும் தவறு ஆ) (iv) மட்டும் தவறு இ) அனைத்தும் தவறு ஈ) அனைத்தும் சரி

9. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது ......
   அ) அனைத்து சரக்குகளின் கொள்முதல் ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்
   இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல் ஈ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்

10. பற்று இருப்புகளும் மற்றும் வரவு இருப்புகளும் சமமாக இருக்கின்றனவா என அறிய அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பட்டியல் --------
    அ) குறிப்பேடு ஆ) நாளேடு இ) இருப்பாய்வு ஈ) இருப்பு நிலைக்குறிப்பு

11. இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம் ---------
    அ) உரிய குறிப்பேடு ஆ) பேரேடு இ) கொள்முதல் ஏடு ஈ) விற்பனை ஏடு

12. ரொக்க ஏடு பதிவு செய்வது ---------
    அ) அனைத்து ரொக்கப் பெறுதல்கள் ஆ) அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்
    இ) (அ), (ஆ) ஆகிய இரண்டும் ஈ) அனைத்து கடன் நடவடிக்கைகள்

13. பொருத்துக
    1. வெறுமையாதல் -- a. முதலீடுகளிலிருந்து பெறப்படும் வட்டி
    2. ஆண்டுத்தொகை முறை -- b. கால்நடைகள்
    3. மறுமதிப்பீட்டு முறை -- c. உயர்ந்த மதிப்புள்ள சொத்துகள்
    4. ஈடுநிதி முறை -- d. இயற்கை வளங்கள்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | d | a | c | b |
| ஆ. | d | a | b | c |
| இ. | c | d | a | b |
| ஈ. | c | a | d | b |

14. முதலீடுகள் மீது கூடியுள்ளவட்டி தோன்றுவது -----------
    அ) இலாப நட்டக்கணக்கின் வரவுப் பக்கம் ஆ) இருப்புநிலைக்குறிப்பின் சொத்துகள் பக்கம்
    இ) மேற்கண்ட இரண்டிலும்

15. குறிப்பேட்டுப்பதிவு நிலையில் கீழ்க்காணும் எப்பிழைகள் நிகழலாம்?
    அ) விடு பிழை ஆ) செய் பிழை இ) விதிப்பிழை ஈ) மேற்கண்ட மூன்றிலும்

16. வங்கி அறிக்கை என்பது ---------

அ) ரொக்க ஏட்டின் ரொக்கப்பத்தியின் நகல்

ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் நகல்

இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்

ஈ) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

17. தேய்மானத் தொகை ₹. 27,000 . சொத்தின் அடக்கவிலை ₹. 3,00,000 எனில், தேய்மானம் விகிதம் ---

அ) 9% ஆ) 8 % இ) 9.09 %

18. திரையரங்கத்தின் இருக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ---------

அ) முதலினச் செலவு ஆ) வருவாயினச் செலவு இ) நீள்பயன் வருவாயினச் செலவு

19. கூற்று (A) : வியாபாரக்கணக்கு, கணக்காண்டிற்குரிய சரக்குகள் வாங்குதல் மற்றும் விற்றலின் முடிவினைக்காட்டும் ஒரு பெயரளவுக்கணக்கு ஆகும்.

காரணம் (R) : வியாபாரக்கணக்கு, விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய்க்கும், விற்றபொருளின் அடக்கவிலைக்குமுள்ள வேறுபாட்டைகணக்கிட தயாரிக்கப்படுகிறது.

அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்

இ) A சரி ஆனால் R தவறு

ஈ) A தவறு ஆனால் R சரி

20. வேறுபட்ட ஒன்று எது?

அ) கைரொக்கம் ஆ) வங்கி ரொக்கம் இ) அறைகலன் ஈ) முன்பணம் கொடுத்தது

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 2 = 14$

21. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?

22. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

23. எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக.

24. பின்வருவனவரும் விவரங்களைக் கொண்டு குறிப்பேட்டுப் பதிவு தருக

(அ) அமீரா அச்சகத் தொழிலை ஆரம்பிக்க ரொக்கமிட்டது ₹. 60,000

(ஆ) கோமதியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹. 20,000

25. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத்தயாரிக்கவும்.

| 2016 | | ₹. |
|---|---|---|
| ஜன 1 | கையில் உள்ள அறைகலன் | 2,000 |
| 1 | அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது | 4,000 |

26. கீழ்க்காணும் கணக்குகளில் தோன்றும் இருப்புகளைக் குறிப்பிடுக.

1. சொத்துகள் 2. விற்பனைத் திருப்பம் 3. வருமானங்கள் 4. கட்டடம்



27. பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கொள்முதல் திருப்ப ஏட்டினை தயார் செய்க

2018 ஜூலை 15 தரம் குறைவுக் காரணமக சுந்தருக்கு திருப்பியது 2 மின்விளக்குகள் ஒன்று ₹. 150

23 ஆணைப்படி இல்லாத்தால் குமாருக்கு திருப்பிய சரக்கின் மதிப்பு ₹. 2,200

28. கீழ்காணும் விவரங்களிலிருந்து செலுத்தற்குரிய தேதியைக் கண்டுபிடி.

| மாற்றுச்சீட்டின் தேதி | தவணைக்காலம் | சலுகை நாட்கள் | செலுத்தற்குரிய தேதி |
|---|---|---|---|
| அக்டோபர் 1 | 2 மாதம் | 3 | ? |
| பிப்ரவரி 28 | 1 மாதம் | 3 | ? |

29. பின்வரும் பிழைகளைத் திருத்துக.

1) கொள்முதல் ஏட்டின் மொத்தம் ₹. 850 குறைவாக தூக்கி எழுதப்பட்டுள்ளது.

2) விற்பனை ஏட்டின் மொத்தம் ₹. 2,500 அதிகமாக தூக்கி எழுதப்பட்டுள்ளது.

30. இராமநாத் அவர்களின் ஏடுகளில் கீழ்க்காணும் இறுதி இருப்புகள் உள்ளன. அவைகளைக் கொண்டு 2017 ஜனவரி, 1 இல் தொடங்கும் ஆண்டிற்கான தொடக்க இருப்பினை உரிய குறிப்பேட்டில் பதிவு செய்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| ரொக்கம் | 30,000 | சரக்கிருப்பு | 15,000 |
| அறைகலன் | 3,000 | பற்பலகடனீந்தோர் | 10,000 |

## பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 3 = 21$

31. மொத்த இலாபத்தினை காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 11,000 | கொள்முதல் | 1,000 |
| விற்பனை திருப்பம் | 500 | கொள்முதல் திருப்பம் | 850 |
| விற்பனை | 19,500 | இறுதி சரக்கிருப்பு | 1,500 |

32. பின்வரும் பிழைகள், இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றை திருத்தம் செய்யவும்.

(அ) கட்டடம் மீதான தேய்மானம் ₹. 3,000 தேய்மானக் கணக்கில் எடுத்தெழுதப்படவில்லை.

(ஆ) வெங்கட்டுக்கு ₹. 1,000 கூலி செலுத்தியது, கூலிக கணக்கில் இருமுறை எடுத்து எழுதப்பட்டுள்ளது.

(இ) நிலாவுக்கு கடனுக்கு ₹. 800 - க்கு சரக்கு விற்றது, சரியாக விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்பட்ட போதிலும், பேரேட்டில் ₹. 500 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

33. கீழ்கண்ட விவரங்களிலிருந்து நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் விகிதம் காண்க

சொத்தின் அடக்கவிலை ₹. 1,00,000

எதிர்நோக்கும் பயனளிப்புக்காலம் 4 வருடங்கள்

எதிர்நோக்கும் இறுதி மதிப்பு ₹. 4,000

34. கீழ்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு திருமதி. கீதாவின் தனிப்பத்தி ரொக்க ஏட்டினை தயார் செய்க.

| 2018 | | ₹. |
|---|---|---|
| மார்ச் | 1. கைரொக்கம் | 40,000 |
| | 13. வங்கியில் செலுத்தியது | 18,000 |
| | 25. பங்காதாயம் பெற்றது | 5,000 |
| | 27. காசோலை பெற்றது | 1,000 |

35. பின்வருபவை முதலினச் செலவுகளா அல்லது வருவாயினச் செலவுகளா என்பதை கூறவும்.

i) தொழிற்சாலை தொடங்க உரிமம் பெறுவதற்காகச் செலுத்தியக் கட்டணம் ₹. 25,000

ii) தொழிற்கூடம் கட்டுவதற்கானச் செலவு செய்தது ₹. 2,00,000 மற்றும் கட்டுமானப் பொருட்கள் சேகரித்து வைப்பதற்காக தற்காலிக குடிசைகள் கட்டியச் செலவு ₹. 10,000

iii) அலுவலக வாடகைச் செலுத்தியது ₹. 5,000

36. கீழ்காணும் விவரங்களிலிருந்து வங்கி சரிக்கட்டும் பட்டியல் தயாரிக்கவும்

i) ரொக்க ஏட்டின்படி பற்று இருப்பு ₹. 7,130

ii) செலுத்திய காசோலை வசூலாகாதது ₹. 1000

iii) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ₹. 800

37. கணக்கியல் சமன்பாட்டின்ப்பாட்டில் விடுபட்ட தொகையினைக் கண்டுபிடி.

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 48,000 | = | ? | + | 27,000 |
| (ஆ) | ? | = | 9,000 | + | 12,000 |
| (இ) | 75,000 | = | 44,000 | + | ? |

38. பின் வரும் நடவடிக்கைகளை எந்த துணை ஏட்டில் பதிவு செய்யவேண்டும் என்று குறிப்பிடுக.

1 உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது.

2 சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு.

3 கடனுக்கு சொத்துகள் வாங்கியது

39. ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளில் மூன்றினை எழுதுக.

40. கணக்கியல் சமன்பாட்டின்படி கணக்குகளை எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கலாம்? அவையாவை?

## பகுதி --- IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. கீழ்காணும் நடவடிக்கைகளின் அடிப்படையில் கணக்கியல் சமன்பாட்டினைக் காட்டிடுக:

| | |
|---|---|
| ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | ₹. 80,000 |
| கடன் கொள்முதல் செய்தது | ₹. 10,000 |
| ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | ₹. 6,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | ₹. 8,000 |



( அல்லது )

கீழ்கண்ட விவரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பிலிருந்து குறிபேட்டுப் பதிவில் விடுபட்ட தொகையினையும், அதன் கணக்குகளையும் கண்டுபிடித்து, முழுமையான குறிப்பேட்டில் எழுதவும்.

கோகிலா ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2017அக்.1 | ----------- ப<br>-----------<br>( அகிலா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 50,000 | ---------- |
| 8 | --------------- ப<br>---------------------<br>(தொண்டு நிறுனங்களுக்கு சரக்குகள் கொடுத்தது ) | | 11,000 | ---------- |
| 15 | விற்பனை மேம்பாட்டுச் ப<br>செலவுகள் க/கு<br>கொள்முதல் க/கு<br>( -------------------------------------------------- ) | | ---------- | 12.500 |
| 25 | ------------------- ப<br>கொள்முதல் க/கு<br>( அலுவலகப் பயன்பாட்டிற்காக சரக்குகள் எடுத்தது ) | | 4,000 | --------- |
| 28 | ------------------- ப<br>------------------<br>(அறைகலனுக்கு காப்பீட்டு முனைமம் செலுத்தியது ) | | 500 | 500 |

42. 2018, மார்ச் 15 ஆம் நாள் ரமேஷ் என்பவர் தனது கடனீந்தோரான காமேஷ் என்பவருக்கு கொடுக்க வேண்டிய ₹. 33,000 க்கு பதிலாக ₹.13,000 செலுத்தி அவர் கணக்கைத் தீர்த்துக் கொண்டார். தகுந்த குறிப்பேட்டுப் பதிவினையும் மற்றும் பேரேட்டுக் கணக்குகளையும் தயார் செய்க.

( அல்லது )

இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதவும்.

(அ) விற்பனை ஏட்டின் மொத்தம் ₹. 2,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(ஆ) இயந்திரம் ₹. 3,000 - க்கு கொள்முதல் செய்தது கொள்முதல் ஏட்டில் பதியப்பட்டுள்ளது.

(இ) மதிக்கு ₹. 45- க்கு சரக்கு விற்றது அவரது கணக்கில்₹. 54 என எடுத்து எழுதப்பட்டுள்ளது.

(ஈ) கொள்முதல் திருப்பஏட்டின் மொத்தம் ₹. 200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

(உ) விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகை ₹. 1,122, பேரேட்டில் ₹. 1,222 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

43. பின்வரும் நடவடிக்கைகளை 2017 டிசம்பர் மாதத்திற்கான, கண்ணணின் கொள்முதல் மற்றும் விற்பனை ஏடுகளில் பதிவு செய்க.

| 2017 | | ₹. |
|---|---|---|
| டிசம்பர் 1 | சுமதியிடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | 17,800 |
| டிசம்பர் 4 | இராணிக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,200 |
| டிசம்பர் 6 | மணியிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 7,000 |
| டிசம்பர் 10 | சரண்யாவிற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 12,500 |
| டிசம்பர் 17 | ஹுசேனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 13,250 |
| டிசம்பர் 21 | இரகுநாதனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 10,000 |
| டிசம்பர் 26 | ஷியாமிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 3,000 |

( அல்லது )

பின்வரும் விவரங்களிலிருந்து காமாட்சி நிறுவனத்தின் 2018 மார்ச் 31- ம் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார்செய்க.

i) ரொக்க ஏட்டின் படி பற்றிருப்பு ₹. 10,500
ii) வங்கியில் செலுத்திய காசோலை ₹. 5,500 வங்கியால் வரவு வைக்கப்பட்டது. ஆனால் ரொக்க ஏட்டில் இருமுறை பதியப்பட்டது.
iii) விடுத்த காசோலை ₹. 7,000 செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது குறித்து ரொக்க ஏட்டில் பதிவு இல்லை.
iv) காசோலை புத்தகக்கட்டணம் ₹. 200 வங்கியால் பற்று வைக்கப்பட்டது ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.
v) பணம் வைப்பு இயந்திரம் வாயிலாக வாடிக்கையாளர் செலுத்திய ₹. 1,000 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

44. பின்வரும் நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதியவும்.

2017

ஜன 1 கைரொக்கம் ₹. 11,500

5 ரொக்க வைப்பு இயந்திரத்தின் மூலம் இராமநாதனுக்கு செலுத்தியது ₹. 300 அவர்அளித்ததள்ளுபடி ₹. 10

8 ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹. 400

10 இராஜகோபாலிடமிருந்து ரொக்கம் பெற்றது ₹. 980 அவருக்கு அளித்த தள்ளுபடி ₹. 20

15 ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹. 400

21 சாந்தி என்பவருக்கு ரொக்கம் செலுத்தியது ₹. 295அவரிடம் பெற்றதள்ளுபடி ₹. 5

25 கூலி ரொக்கமாகச் செலுத்தியது ₹. 50

31 சஞ்சீவ்என்பவருக்கு ₹. 390 அளித்து கணக்கை முழுவதும் தீர்த்துக் கொண்ட ₹. 400

( அல்லது )



பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு ரொக்கம், வங்கி மற்றும் தள்ளுபடி பத்திகள் கொண்ட ரொக்க ஏடு தயார் செய்க.

| 2012 பிப்ரவரி | | ₹ |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 30,000 |
| | வங்கி இருப்பு | 20,000 |
| 4 | வங்கியில் செலுத்தியது | 18,000 |
| 12 | சுனிலிடம் பெற்ற காசோலை | 12,000 |
| | தள்ளுபடி அனுமதித்தது | 300 |
| 17 | கவிதாவிற்கது வழங்கிய காசோலை | 10,000 |
| | தள்ளுபடி பெற்றது | 200 |
| 18 | சொந்த தேவைக்கு வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 2,000 |
| 20 | அலுவலகச் செலவிற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 8,000 |

45. இராம் ஆடை நிறுவனம் ஏப்ரல் 1, 2014 அன்று ₹. 2,00,000 மதிப்புள்ள ஓர் இயந்திரத்தை வாங்கியது. அதற்கு நிறுவுகைச் செலவாக ₹ .10,000 செலவழித்தது. குறைந்து செல் மதிப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கப்பட்டது. முதல் மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரக்கணக்கு மற்றும் தேய்மானக்கணக்கினை தயாரிக்கவும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31-ல் முடிக்கப்பெறுகின்றன.

( அல்லது )

கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன்பணமீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 ஜுலை | | ₹. |
|---|---|---|
| 1 | காசாளரிடமிருந்து முன்பணம் பெற்றது | 2,000 |
| 7 | மடல் ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது | 100 |
| 8 | வெள்ளைத் தாள்கள் வாங்கியது | 50 |
| 10 | ஆட்டோ ரிக்ஷா கட்டணம் கொடுத்தது | 200 |
| 15 | கூலி கொடுத்தது | 300 |
| 18 | தபால் செலவுகள் செய்தது | 100 |
| 21 | எழுது பொருள்கள் வாங்கியது | 450 |
| 23 | தேநீர் செலவுகள் செய்தது | 60 |
| 25 | துரித அஞ்சல் செலவு செய்தது | 150 |
| 27 | சிற்றுண்டி செலவுகள் செய்தது | 250 |
| 31 | ஏற்றிச் செல்செலவுகள் செய்தது | 150 |

46. பின்வரும் செலவினங்கள் முதலினம், வருவாயினம் மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகளா எனக் கூறுக.

i) புதிய இயந்திரம் வாங்கியதற்கான ஏற்றிச்செல் கட்டணம்,மற்றும் நிறுவுகைச் செலவுகள் ₹. 1,000
ii) இயந்திரம் இயக்குபவருக்கான கூலி செலுத்தியது ₹. 5,000
iii) புதிய தொழிற்சாலையை வண்ணம் பூசுவதற்கானச் செலவு ₹. 10,000
iv) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை. ₹. 2,000
v) பொறி மற்றும் இயந்திரம் மீதான பேரளவு பழுதுபார்ப்புச் செலவுகள் ₹. 40,000

( அல்லது )

திரு. பாபு ஏடுகளிலிருந்து 31.3.2017 அன்று எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

| விவரம் | தொகை ₹ | விவரம் | தொகை ₹ |
|---|---|---|---|
| வாடகை மற்றும் வரிகள் | 5,000 | வாடகை | 6,000 |
| அளித்த தள்ளுபடி | 3,250 | பொதுச் செலவுகள் | 3,000 |
| முதல் | 10,000 | சட்டச் செலவுகள் | 2,000 |
| காப்பீட்டு முனைமம் | 4,000 | கொள்முதல் | 40,000 |
| எடுப்புகள் | 5,000 | விற்பனை | 55,350 |

47. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 31 மார்ச் 2018 ஆம் ஆண்டிற்கான வியாபார கணக்கினை தயார் செய்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | வெளித்தூக்கு கூலி | 5,100 |
| கொள்முதல் | 27,000 | உள்திருப்பம் | 7,000 |
| விற்பனை | 50,000 | நிலகரி மற்றும் எரிவாயு | 3,300 |
| கூலி | 2,500 | உள்தூக்கு கூலி | 2,600 |
| வெளித்திருப்பம் | 5,200 | இறுதிச் சரக்கிருப்பு | 5,200 |
| வாடகை | 7,500 | கொள்மீதான வண்டிச் சத்தம் | 8,000 |
| கொள்முதல் மீதானஇறக்குமதி வரி | 3,500 | உற்பத்தி செய்த சரக்கின் மீதான அடக்கவிலை | 12,000 |

<u>கூடுதல் தகவல்கள்</u>:

(அ) கொடுபடவேண்டிய கூலி ₹. 500

(ஆ) முன்கூட்டிச் செலுத்திய நிலகரி மற்றும் எரிவாயு ₹. 300

( அல்லது )

கீழ்க்கண்ட விவரங்கள் இருபாய்விலிருந்து பெறப்பட்டன. பற்பல கடனாளிகள் ₹. 33,000 ; வாராக்கடன் ₹. 5,000.

<u>கூடுதல் தகவல்கள்</u>:

(அ) கூடுதல்வாராக்கடன் ₹. 3,000 போக்கெழுதவும்.

(ஆ) 10% வாராஜயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும்.

தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தந்து, இவ்விவரம் இலாப நட்டக்கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.